அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண்: 185/2016
தேதி:06.12.2016

## தாயை இழந்து தவிக்கிறது தமிழகம்

## சமத்துவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை.

தாயை இழந்த உணர்வில் வாடும் தமிழக மக்களுக்கும் அஇஅதிமுக சகோதர சகோதரிகளுக்கும் ஆறுதல் கூற எம்மொழியிலும் வார்த்தை இல்லை எனினும் அவர்களுக்கு இறைவன் மன உறுதியையும் இந்த பெரும் துயரில் இருந்து மீள்வதற்கு தேவையான சக்தியையும் தர வேண்டும்.

தன்னிகரில்லா தலைமை பண்பு , படித்தவர் முதல் பாமரன் வரை அனைவரையும் தன்வசம் கவர்ந்த வசீகர தன்மை , வியக்கவைக்கும் அறிவாற்றல் , அளவிட முடியா மன உறுதி, கடினமான பணிகளையும் வெற்றிகரமாக முடிக்கும் சாதுர்யம் , எவராலும் நிகர் செய்ய முடியாத திறமைகள், உறக்கம் அறியாத ஓய்வறியாத உழைப்பு, மக்களை அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் உயர்ந்த சிந்தனைகள் , இவை அனைத்தையும் கொண்ட மாபெரும் உன்னத தலைவி.

இலங்கை தமிழர் பிரச்சனைகள் , காவிரி நதி நீர் பங்கீடு போன்ற பல நீண்ட கால பாதிப்புகளுக்கு இரும்பு போன்ற உறுதியுடன் தார்மீக அடிப்படையிலும் சட்டத்தின் அடிப்படையிலும் அவர் எடுத்த முயற்சிகளும் செயல்பாடுகளும் உலகம் இருக்கும் வரை தமிழினத்தால் தமிழகத்தால் மறக்க முடியாது.

ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தை புரட்சி தலைவரின் பாதையில் மிக உறுதியான கட்டமைப்புடன திறம்பட வழி நடத்திய அவரது செயல்திறனை தேசமே கண்டு வியப்பதை நாம் அறிவோம்.

இந்த அபூர்வ ஆற்றல்மிகு புரட்சிதலைவி நம்மை விட்டு பிரிந்ததை எண்ணும்போது நெஞ்சம் பொறுக்கவில்லை. நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து என் கண்ணீர் துளிகளை என் சார்பாகவும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் காணிக்கையாக்குகிறேன்.

தமிழரின் வாழ்வை வளப்படுத்த உழைத்த அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

கனத்த இதயத்துடன்

ஆர் சரத்குமார் B Sc.
நிறுவனத்தலைவர்